நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு
முன்னிலை :– ச.கிருஷ்ணராஜன்

ந.க.எண்: 2054/ 2023/எப்1 நாள்:– 09.01.2024

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம்-நெல்லிக்குப்பம் நகராட்சி -வான்பாக்கம் கிராமம்- வார்டு எண் -A பிளாக் எண் - 26 நகரளவு எண் - 28/2, பழைய சர்வே எண் - 231/6ல் 0.94 ஏக்கர் பரப்பளவு 3800.00 ச.மீட்டர் நிலத்திற்கு உத்தேச தேவி நகர் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகரித்து- உத்திரவு வழங்குதல்- தொடர்பாக.

பார்வை: 1.கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு மனைப்பிவு அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்ட தங்களின் மனுநாள்: 14.08.2023

2.உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 5BMTS6Z0/13180/TCP/2023 மற்றும் தொழில் நுட்ப அனுமதி எண் ம.வ/ந.ஊ.உ.இ (க.மா) எண் 87/2023 நாள்: 10.08.2023

3.நெல்லிக்குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தான பத்திர ஆவண எண் 2477/2023 நாள்: 24.07.2023.

4.நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 12843/2022/டிபி2 நாள்: 01.08.2023.

5.நகர மன்ற தீர்மான எண்: 396 நாள்: 29.12.2023

****

பார்வை 1ல் காணும் திரு.D.ராஜசேகரன் அவர்களின் கடிதத்தில் கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் நகராட்சி வான்பாக்கம் கிராமம் வார்டு எண் -A, பிளாக் எண் - 26 நகரளவு எண் 28/2, பழைய சர்வே எண் 231/6ல் உள்ள 0.94 ஏக்கர் (3800.00 சதுர மீட்டர்) இடத்தில் தேவி நகர் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், பார்வை 2ல் காணும் உதவி இயக்குநர், கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.உ.இ (கமா) எண் 87/2023 என எண்ணிடப்பட்டு 10.08.2023ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் நெல்லிக்குப்பம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்படி சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு பரப்பு (A) 25.00 சதுர மீட்டர் மற்றும் மின்சாரதுறை பரப்பு (B) 25.00 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடம் பத்திரப்பதிவு செய்து ஆவண எண்கள்:2477/2023 மற்றும் 1763/2023 நாள்: 24.07.2023 மற்றும் 05.06.2023ன் படி தங்களால் இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை 4ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள அடிப்படை வசதிகளும் செய்து முடிக்கப்பட்டு இந்நகராட்சி பொறியியல் பிரிவில் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது என சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், தெரு

விளக்கு அமைக்க ரூ.112200/- பற்றுச்சீட்டு எண்: VMCO191A1D1140 நாள்: 07.11.2023ன் படி மின் வாரியத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

நகராட்சிக்கு செலுத்த வேண்டிய பராமரிப்பு பணிக்கு திரும்ப செலுத்தக்கூடிய வைப்புத் தொகை ரூ1.25 இலட்சம், நாள்:01.11.2023 அன்று நகராட்சி கருவூலத்தில் தங்களால் செலுத்தப்பட்டுள்ளது.(பற்றுச்சீட்டு எண் 094/01/2/23-24/0005455) அனைத்து மனைகளுக்கும் காலிமனை வரிவிதிப்பு செய்து தொகையினை வசூலிக்கப்பட்டுள்ளது. புதிய மனைக்களுக்கான ஆய்வுக்கட்டணம் ரூ.5000/- மற்றும் மனைப்பிரிவு அமைப்பதற்கான அங்கீகாரம் கட்டணம் ரூ.15000/- நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 5ல் நகரமன்ற அனுமதிப் பெற்று அதற்கான அனுமதி எண்-396, நாள்:29.12.2023. எனவே கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பார்வை 2ல் அளிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் தேவி நகர் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

இணைப்பு- மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம்

பெறுநர்:
திரு. D.ராஜசேகரன்
த/பெ. D.தண்டபாணி
15, ட்ரிவிட்டி அவென்யூ
ஆவடி, சென்னை 600 062

நகல்:

1. உதவி இயக்குநர், கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
2. உதவி இயக்குநர் (நில அளவை) கடலூர் மாவட்டம்
3. சார்பதிவாளர், நெல்லிக்குப்பம்
4. நகராட்சி பொறியாளர் - நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு மற்றும் சாலைகள் விவரத்தினை சொத்து பதிவேடு மற்றும் சாலைப் பதிவேட்டில் பதிவு செய்ய